# சூலூர் ஆர்.வி.எஸ். கலை, அறிவியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு தினம்

**கோவை**

கோவை ரத்னவேல் சுப்ரமணியம் கல்வி அறக்கட்டளை சார்பில், சூலூர் ஆர்.வி.எஸ். கலை, அறிவியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு தின விழா சிறப்பாக நடைபெற்றது.

இதில், 700 மாணவ, மாணவிகள் வேலைவாய்ப்பு கடிதம் பெற்றுக் கொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் சிவகுமார் வரவேற்றார். இயக்குநர் பி.மஞ்சு, ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். அவர் பேசும்போது, "இக்கல்லூரி மாணவர்கள் இன்போசிஸ், டிசிஎஸ், ஹெச்.சி.எல், லீமெரிடியன், விவந்தா பை தாஜ் , விப்ரோ, டெக் மஹிந்திரா , சிஎஸ்எஸ் கார்ப், எல் அண்ட் டி கன்ஸ்டிரக்சன்ஸ் முதலான நிறுவனங்களில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்," என்றார்.

ஆர்.வி.எஸ். கல்வி அறக்கட்டளை செயலர் முனைவர் எச்.முகமது முபாரக் தலைமை வகித்தார். அவர் பேசும்போது, "வேலைவாய்ப்பு பெற்ற மாணவர்கள், தாங்கள் பணிபுரியும் இடங்களில் நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதுடன், எதிர்காலத்தில் சமுதாயத்துக்கு உதவும் வகையில் செயல்பட வேண்டும்," என்றார்.

சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கோடக் மகேந்திரா வங்கி இணை இயக்குநர் ஆபிரகாம் பேசும்போது, "மாணவர்கள் அதிக நூல்களைப் படிப்பதுடன், கடினமாக உழைக்க வேண்டும். சம்பளம் குறைவாக இருக்கிறது என்று எண்ணாமல், கிடைத்த பணியை சிறப்பாக செய்ய வேண்டும். கடுமையாக உழைத்தால் 100 சதவீத வெற்றி நிச்சயம்.

போட்டிகள் நிறைந்த உலகில், பல்வேறு திறன்களையும், நவீனத் தொழில்நுட்பங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். படிக்கும்போதே லட்சியத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும். ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்வதுடன், கிடைக்கும் நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்," என்றார்.

கல்லூரி துணை முதல்வர் முனைவர் ஐயப்பதாஸ் மற்றும் துறை இயக்குநர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். வேலைவாய்ப்பு பயிற்சி அளித்த ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் நிசார் அகமது நன்றி கூறினார்.




▶▶ கோவை சூலூர் ஆர்.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு தின விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள், கல்லூரி நிர்வாகிகள் மற்றும் மாணவ, மாணவிகள்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை 29-03-2019

# 700 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை

**சூலூர், மார்ச் 26 –**

சூலூர் ஆர்.வி.எஸ்., கலைக்கல்லூரியில் நடந்த வேலைவாய்ப்பு தின விழாவில், 700 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. சூலூர் ஆர்.வி.எஸ்., கலை அறிவியல் கல்லூரியில், வேலை வாய்ப்பு தின விழா நடந்தது. முதல்வர் சிவக்குமார் வரவேற்றார். வேலைவாய்ப்பு இயக்குனர் மஞ்சு ஆண்டறிக்கை வாசித்தார். அறக்கட்டளை செயலர் முகமது முபாரக் தலைமை வகித்தார்.

கோடக் மகிந்திரா பேங்க் இணை இயக்குனர் ஆபிரகாம், 700 மாணவ, மாணவியருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசுகையில், ''அதிகமான நூல்களை படிக்க வேண்டும். கிடைத்த பணியை திறம்பட செய்ய வேண்டும். போட்டிகள் அதிகம் உள்ளதால், ஆன்லைன் வகுப்புகளில் சேர்ந்த பயில வேண்டும்,'' என்றார்.

துணை முதல்வர் ஐயப்பதாஸ், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் பங்கேற்றனர். வேலைவாய்ப்பு அலுவலர் நிசார் நன்றி தெரிவித்தார்.

தினமலர் 26-03-2019